DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM
**STC.No.01/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 1 | Caste | : | |
| Name | : | நாகரெத்தினம் | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 19th day of January 2023.
19.01.2023.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

1. ஏற்கனவே நான் குறுக்கு விசாரணையில் எதிரி 2 பைசா வட்டிக்கு பணம் கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது உறவினரிடமிருந்து எத்தனை பைசா வட்டிக்கு பணம் வாங்கி கொடுத்தேன் என்றால் உறவினரிடம் வட்டிக்கு வாங்கவில்லை. உறவினர்கள் எவ்வறவு பணம் வேண்டுமானாலும் வட்டியில்லாமல் எனக்கு கொடுப்பார்களா என்றால் இல்லை 6 மாதம் காலஅவகாசம் கொடுத்தார்கள். நான் தாக்கல் செய்துள்ள புகார் மனுவில் உள்ள விபரங்ள் எல்லாம் எனக்கு தெரியும். அந்த புகார் மனுவில் எதிரி எந்த தேதியில் பணம் கேட்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இல்லை சொல்லியுள்ளேன். புகார் மனுவில் எங்கு வைத்து பணம் கேட்டார் என்று சொல்லவில்லை என்றால் இல்லை வீட்டில் வைத்து கேட்டதாக சொல்லியுள்ளேன். நான் பணத்தை நண்பர்களிடமும், உறவினர்களிடமும் இருந்து பணத்தை வாங்கி கொடுத்தேன் என்ற சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நண்பர்கள் யார் யார் என்றால் அக்கா மகளிடம் பணம் வாங்கி கொடுத்தேன். நண்பர்களிடம் இருந்து ரூ.50 ஆயிரம் வாங்கி கொடுத்தேன். அது என்ன தேதி என்றால் 26.09.2019 ஆகும். எனது நண்பர் பெயர் என்ன என்றால் பிரேம் அவர் தங்கச்சிமடத்தில் வசித்து வருகிறார். எனது அக்கா மகளிடம் மீதத் தொகை வாங்கி கொடுத்தேன். நான் பிரேம் மற்றும் எனது அக்கா மகளிடம் வாங்கிய பணம் போக நான் என் கைவசம் இருந்து எவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்றால் ரூ.1,50,000/- கொடுத்தேன். அந்த பணம் நகை வாங்குவதற்காக எனது வங்கி கணக்கில் இருந்து எடுத்துவைத்திருந்ததாக சொல்லியுள்ளேன் அது எந்த தேதி என்றால் ஞாபகம் இல்லை.

2. பணத்தை எதிரி என்னிடம் நேரடியாக வாங்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் எதிரி எங்கு வைத்து என்னிடம் பணம் வாங்கினார் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

எதிரிக்கு நான் பணம் கொடுத்த விபரத்தை வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை பென்சன் என்பதால் எனக்கு வருமான வரி கிடையாது. எதிரி நான் சொன்ன தேதியில் என்னிடம் எத்தனை மணிக்கு வந்து பணம் வாங்கினார் என்றால் 11.00 மணி இருக்கும். எதிரி நகராட்சியில் பணிபுரிந்து வருகிறார் அன்றைய தேதியில் என்னை வீட்டில் வைத்து சந்திக்கவும் இல்லை, என்னிடம் வீட்டில் வைத்து பணமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தேதியில் எதிரி நகராட்சியில் பணியில் இருந்தார் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் என்ன சொல்லி , எதற்காக தேவைப்படுவதாக பணம் கேட்டார் என்றால் கடனை அடைப்பதற்காக பணம் கேட்டார். நான் குடியிருந்து வரும் மண்படம் பகுதியில் பணம் வட்டிக்கு கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல. நான் இரயில்வேயில் இருந்து எந்த வருடம் ஓய்வு பெற்றேன் என்றால் 2016-ம் வருடம் 7 வது மாதம் ஓய்வு பெற்றேன். ஓய்வு பெற்ற பின்பு இராமேஸ்வரத்தில் எவ்வளவு நாள் குடியிருந்தேன் என்றால் இீல்லை நான் மண்டபம் இரயில்வே காலனியில் தான் குடியிருந்து வருகிறேன்.

3. நான் நண்பர்களிடமும், உறவினர்களிடமும் இருந்து வாங்கிய பணத்திற்கு காசோலை எதுவும் எதிரியிடமிருந்து வாங்கவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே குறுக்கு விசாரணையில் பாம்பனில் உள்ள நண்பர் மூலமாகத்தான் எதிரியை தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி புகாரில் சொன்னபடி எந்த பணமும் என்னிடம் வாங்கவில்லை என்றாலும் எதிரியை எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்கு எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 13.12.2019-ம் தேதி அனுப்பினேன். அந்த காசோலை பணம் இல்லை என திருப்ப வந்துவிட்டது என்றால் முதலில் சாட்சி சரி என்றார் பின்பு கையெழுத்து குறைபாடு உள்ளது என திரும்பிவந்ததாக கூறுகிறார். காசோலையை எத்தனை மாத தவனைக்கு பணம் கொடுப்பதாக எதிரி கூறினார் என்றால் 6 மாத தவனை ஆகும். 6 மாத தவனை முடிந்த பின்பு நான் எதிரியிடம் கேட்காமல் காசோலையை வங்கியில் செலுத்தினேன் என்றால் இீல்லை எதிரியிடம் கேட்டுவிட்டு தான் செலுத்தினேன். என்னுடைய புகார் மனுவில் 6 மாத தவனை முடிந்த பின்பு தான் வங்கியில வசூலுக்காக போடுவதற்கு கேட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.எதிரியிடம் வசூலுக்காக வங்கியில் காசோலையை செலுத்துவதற்கு நேரடியாக கேட்டேனா என்றால் இல்லை போன் மூலமாக கேட்டேன். நான் காசோலையை வசூலுக்கு போடுவதற்கு போன் மூலமாக எதிரியிடம் கேட்டேன் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் போன் நம்பர் ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. எதிரி என்னிடம் நேரடியாக பணம் எதுவும் வாங்கவில்லை, என்றாலும், காசோலை என்னிடம் வாங்கி பணத்திற்காக எதிரி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் எந்த காலத்திலும் எதிரியை நேரடியாக சந்திக்கவில்லை என்றால் சரியல்ல.